## விருதுநகர் மாவட்டக் கருவூல அலுவலரின் செயல்முறை ஆணைகள்
## முன்னிலை: திரு.மு.தாமரை, எம்.காம்.,

ந.க.எண்.6052/அ2/2021-1 நாள்.17/09/2021

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் தேர்வாணையம் தொகுதி 4இல் அடங்கிய நேரடித் தேர்வு - 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டிற்கான தேர்வில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட திருமதி.ஆ.ச்லட்சுமி என்பவரை கருவூல கணக்குத்துறைக்கு ஒதுக்கீடு செய்து பணி நியமன ஆணை வழங்கியது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை: 1) ஆணையர், கருவூல கணக்குத் துறை, சென்னை அவர்களின் செ.மு.ந.க.எண் 18541/2020/சி3, நாள்.31.07.2020.
2) இவ்வலுவலக செ.மு.ஆணை ந.க.7252/2020/அ2 நாள்: 10.08.2020.

*********

**ஆணை:-**

தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் தேர்வாணையத்தினால் 2018-2019 மற்றும் 2019-2020-ஆம ஆண்டிற்கான தொகுதி 4இல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடி தேர்வு மூலம் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டு கருவூல கணக்குத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 1இல் காணும் ஆணையர், கருவூல கணக்குத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, பணி நியமனம் பெற்று மாவட்ட கருவூலம் விருதுநகரில் 10.08.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திருமதி.ஆ.ச்லட்சுமி (தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணைய வ.எண்.100) என்பவரது பணியினை தமிழ்நாடு மாநில (ம) சார்நிலைப்பணித் தொகுதி விதி 23(a) -1ல் வரையறைகளுக்கு உட்பட்டு தனியர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 10.08.2020 முற்பகல் முதல் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்புமிகு உயர்நீதி மன்ற கிளை மதுரை ஆகியவற்றில் 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் தேர்வாணையம் தொகுதி IV தேர்வு சம்பந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் முடிவுகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

2) மேலும், பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர்பணிக்காலத்தில் இரண்டாண்டு காலப்பணி (duty period) தகுதிகாண் பருவகாலமாக நிர்ணயம் செய்தும், மேற்படி தகுதிகாண் பருவகாலத்தில் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்து தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற பின்னரே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராவர் என்றும் ஆணை வழங்கப்படுகிறது.

கருவூல அலுவலர்,
விருதுநகர்.

**பெறுநர்**
திருமதி.ஆ.ச்லட்சுமி,
இளநிலை உதவியாளர்,
மாவட்ட கருவூலம், விருதுநகர்.
**நகல்**
இருப்பு கோப்பிற்கு